மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 60/2017 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | K.R.மணி | நாள் | 13.06.2023 |
| தகப்பனார் பெயர் | இராமசாமி கவுண்டர் | | |

**5 முதல் 7 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–**

15) என் பிரமாண பத்திரிக்கையில் 1 முதல் 4 வரையிலான பிரதிவாதிகள் ச.எண்.227/6A ல் உள்ள 15 செண்ட் நிலத்தின் பேரில் தவறாக உரிமை மூலம் கோருகிறார்கள் என நான் கூறியுள்ளேன் என்றால், சரிதான். அவ்வாறு 1 முதல் 4 வரையிலான பிரதிவாதிகள் எவ்வித உரிமைமூலமும் இல்லாமல் மேற்படி சொத்தை உரிமை கோருகிறார்கள் என்பதற்கு ஏதேனும் ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால், தாக்கல் செய்துள்ளேன்.

16) அவ்வாறு என்ன ஆவணங்களை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால், நிலவுடமை மேம்பாட்டு திட்டத்திற்கு பின்னிட்டு ச.எண்.227/6 உட்பிரிவு செய்யப்பட்டதற்கான ஆவணத்தை நான் தாக்கல் செய்துள்ளேன். தற்போதும் ச.எண்.227/6A ல் உள்ள 15 செண்ட் நிலம் தொடர்பாக எங்களுக்கும், 1 முதல் 4 வரையிலான பிரதிவாதிகளுக்கும் இடையே பெயர் மாற்றி பட்டா வழங்கியது தொடர்பாக வழக்கு மேட்டூர் கோட்டாட்சியரிடம் நிலுவையில் உள்ளது என்றால், இல்லை. மேற்படி பிரச்சனை தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கிட்டு கொள்ளுமாறு அறிவுறுத்தி கோட்டாட்சி அலுவலகத்தில் அது சம்பந்தமான கோப்புகள் முடிக்கப்பட்டுவிட்டது.

17) அவ்வாறு கோட்டாட்சியரிடம் நடைபெற்று வந்த விசாரணை தொடர்பாக மாவட்ட வருவாய்துறை உயர் அதிகாரிகளிடம் மேல்முறையீடு ஏதேனும் செய்துள்ளேனா என்றால், இல்லை. தாவா சொத்தை நான் கிரயம் பெறும்போது மேற்படி சொத்து என் முன் விற்பனையாளருக்கு பட்டாப்படி பாத்தியப்பட்ட சொத்தா அல்லது ஆவணத்தின் படி பாத்தியப்பட்ட சொத்தா என பரிசீலனை செய்து கிரயம் பெற்றேனா என்றால், ஆம். அவ்வாறு பரிசீலனை செய்கையில் அது என் முன் விற்பனையாளருக்கு பத்திரத்தின் படி பாத்தியப்பட்டது.

18) என் மனைவியின் பெயரில் மேற்படி சொத்திற்கு பட்டா வழங்கப்பட்டதற்கு பின்னிட்டு 1ம் பிரதிவாதி அதற்கு ஆட்சேபனை தெரிவித்து 7ம் பிரதிவாதியான மேட்டுர் வட்டாட்சியரிடம் மனு அளித்தார் என்று நான் என் பிரமாண பத்திரிக்கையில் சொல்லியுள்ளேன் என்றால், சரிதான். எந்த தேதியில் அவ்வாறு 1ம் பிரதிவாதியால் மனு அளிக்கப்பட்டது என்றால், தேதி சரியாக நினைவில்லை.

19) அதேபோல் 1 முதல் 4 வரையிலான பிரதிவாதிகள், துணை ஆட்சியரான 6ம் பிரதிவாதியிடம் மனு அளித்ததாக நான் சொல்லியுள்ள நிலையில் அவர்கள் எந்த சொத்து தொடர்பாக எந்த தேதியில் மனு அளித்தார்கள் என்றால், இதே சொத்திற்காகத்தான் மனு அளித்தார்கள். தேதி சரியாக நினைவில்லை. ஆனால் இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு 6 மாதத்திற்கு முன்பு அளித்தார்கள்.

20) 6ம் பிரதிவாதி சட்டத்திற்கு புறம்பாக கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வருவாய் ஆய்வாளரிடமிருந்து அறிக்கை பெற்றதாக என நான் சொல்லியுள்ள நிலையில் எவ்வாறு சட்டத்திற்கு புறம்பாக அறிக்கை பெற்றார் என்றால், தொடர்ந்து பல காலமாக தாவா சொத்து எங்கள் அனுபவத்தில் உள்ள நிலையில் அதற்கு புறம்பாக அறிக்கை பெற்றுள்ளார் என்பதைதான் அவ்வாறு நான் சொல்லியுள்ளேன்.

21) வருவாய் நிலைமுறை ஆணை மற்றும் வருவாய் சட்டங்களின் படி ஒரு வருவாய் துறை அதிகாரி மனுவை பெற்றால் அதை எவ்வாறு பரிசீலனை செய்து விசாரணை செய்ய வேண்டும் என்பது குறித்த விவரங்கள் எனக்கு தெரியும் என்றால், சரிதான். வட்டாட்சியரிடம் மனு அளிக்கப்பட்டவுடன் வட்டாட்சியர் என்ன நடைமுறையை பின்பற்ற வேண்டும் என்றால், மனுவை பெற்றவுடன் மேற்படி மனுவை தன் கீழ்நிலை அதிகாரிகளுக்கு விசாரணை செய்ய அனுப்ப வேண்டும். மேற்படி அதிகாரிகள் நேரடியாக ஸ்தல ஆய்வு செய்து ஸ்தலத்திலுள்ள தரப்பினர்களை விசாரணை செய்து தங்களது அறிக்கையை வட்டாட்சியருக்கு சமர்ப்பிக்க வேண்டும். அதன் அடிப்படையில் தான் அவர் உத்தரவு பிறப்பிக்க வேண்டும். ஆனால் அவ்வாறு நேரடியாக ஸ்தல ஆய்வு செய்யவோ, எங்கள் ஆவணத்தை பரிசீலனை செய்யவோ இல்லை.

22) வட்டாட்சியரிடம் மனு அளிக்கப்பட்டால் இரு தரப்பிற்கும் அறிவிப்பு அனுப்பப்பட்டு இரு தரப்பினரும் கேட்கப்பட்டு அதற்கு பின்புதான் மேற்படி மனுவில் அவர் உத்தரவு பிறப்பிப்பார் என்றால், சரிதான். ஆனால் எனக்கு அறிவிப்பு அனுப்பவில்லை.

23) 6, 7 பிரதிவாதிகள் அவ்வாறு சட்டத்திற்கு புறம்பாக செயல்படுகிறார்கள் என நான் சொல்லியுள்ள நிலையில் அது தொடர்பாக அவர்களது உயர் அதிகாரிகளுக்கு ஏதேனும் புகார் அளித்துள்ளேனா என்றால், இல்லை. நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து விட்டேன்.

24) பட்டா பாஸ்புக் சட்டத்தின் படி வருவாய் துறை அதிகாரிகளிடம் விசாரணை நடைபெற்று நிலுவையில் இருக்கும்போது மேற்படி விசாரணையின் பேரில் ஏதேனும் முறையிட்டிருந்தால் நான் வருவாய்துறை மேல்முறையீடுதான் தாக்கல் செய்ய முடியுமே தவிர உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய இயலாது என்றால், சரியல்ல.

25) எனக்கு வருவாய் துறை அதிகாரிகளான 6, 7 பிரதிவாதிகளால் அழைப்பாணையே வழங்கப்படவில்லை எனவும், என்னை அழைத்து விசாரிக்கவில்லை எனவும், என் குறுக்கு விசாரணையில் ஒரு இடத்தில் கூறிவிட்டு தற்போது மேற்படி வருவாய் துறையினரிடம் இந்த தாவா சொத்து சம்பந்தமாக எந்த மனுவும் நிலுவையில் இல்லை எனவும், அவை முடிக்கப்பட்டுவிட்டது எனவும் கூறுவதிலிருந்தே நான் முரண்பட்ட பதில்களை அளிக்கிறேன் என்றால், சரியல்ல. எனக்கு சார் ஆட்சியர் அலுவலகத்தில் இருந்துதான் அழைப்பாணை வந்தது. வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை.

26) சார் ஆட்சியரிடம் நான் மனு ஏதேனும் அளித்தேனா என்றால், இல்லை. எனக்கு அழைப்பாணை வந்தது. நான் விசாரணைக்கு சென்றேன். மேற்படி விசாரணையில் நான் எழுத்து மூலமாக ஏதேனும் பதில் அளித்தேனா என்றால், இல்லை. அசல் ஆவணங்களை காட்டினேன். பரிசீலனை செய்தார்கள்.

27) 24.03.2017ம் தேதி 6ம் பிரதிவாதி விசாரணை நடத்தினார் என சொல்லியுள்ள நிலையில் மேற்படி விசாரணையில் நான் பங்கேற்றனா என்றால், பங்கேற்றேன். என் அசல் ஆவணங்களை காண்பித்தேன். நான் சொல்வது பொய்யானது என்றாலும், என் முதல் விசாரணை சாட்சியத்தில் ஆவணங்களை காட்டுவதற்கு அவகாசம் கேட்டேன் என சொல்லிவிட்டு தற்போது என் குறுக்கு விசாரணையில் ஆவணங்களை காண்பித்தேன் என முரணாக சொல்லியுள்ளேன் என்றால், சரியல்ல.

28) மேற்படி விசாரணையில் நான் என் தரப்பு ஆவணங்களை சரியாக முன்னிலைப் படுத்தாததால் தான் மேற்படி 6ம் பிரதிவாதி தன்னிடமுள்ள ஆவணங்களின் அடிப்படையில் உத்தரவு போடுவதாக தெரிவித்தார் என என் பிரமாண பத்திரத்தில் நான் சொல்லியுள்ளேன் என்றால், சரிதான்.

29) வருவாய் துறையினரான 6, 7ம் பிரதிவாதிகள் தான் ஒரு நிலத்திற்குரிய பட்டா, சிட்டா, அடங்கல், அ பதிவேடு போன்ற அனைத்து வருவாய் துறை ஆவணங்களையும் பராமரிப்பு செய்து வருகிறார்கள் என்றால், சரிதான். அவ்வாறு வருவாய் ஆவணங்களில் ஏதேனும் பிரச்சனை ஏற்பட்டால் மேற்படி ஆவணங்கள் தொடர்பாக விசாரணை செய்து அவற்றின் பேரில் நடவடிக்கை எடுக்க வருவாய் துறை அதிகாரிகளுக்கு அதிகாரம் உள்ளது என்றால், சரிதான்.

30) பொதுவாக ஒரு நிலத்திற்கு பெயர் மாற்றமோ அல்லது திருத்தமோ செய்ய வேண்டுமெனில் ஆவணத்தின் அடிப்படையிலும், அனுபவத்தின் அடிப்படையிலும் தான் அவ்வாறு செய்வார்கள் என்றால், சரிதான்.

31) 5 முதல் 7 வரையிலான பிரதிவாதிகள் மேற்கண்டவாறு ஆவணத்தின் அடிப்படையிலும், அனுபவத்தின் அடிப்படையிலும் தான் விசாரணை செய்து செயல்பட்டுள்ளார்கள் என்றாலும், நான் சொல்வது போல் அவர்கள் சட்டத்திற்கு புறம்பாக எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளவில்லை என்றாலும், சரியல்ல. இவ்வழக்கில் என் பக்கமுள்ள தவறை மறைக்க வருவாய் துறை அதிகாரிகள் மீது

அடிப்படை ஆதாரமின்றி பொய்யான குற்றச்சாட்டுகளை முன் வைக்கிறேன் என்றால், சரியல்ல. 5 முதல் 7 வரையிலான பிரதிவாதிகளை பொறுத்து இவ்வழக்கு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கது என்றால், சரியல்ல.

ஒம்/−திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.